உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உச] குரோதனவருஷ பங்குனிமீ [பகுதி ரு.

Vol. XXIV. March-April-1926. No. 5.

சதுரங்க நூல்.

முன்னுரை.

செந்தமிழ்ப்பிரசுரமாக இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்திலிருந்து பல ஆண்டுகளுக்குமுன் வெளிப்போந்த மாறனலங்காரத்தின் அருமை பெருமைகளைக் கற்றோரெல்லாம் நன்கறிவர். பொருளணி சொல்லணி களைப் பலவாறு வகுத்து விரித்து நயம்படவிளக்கிச்செல்லு மிந்நூலின் சொல்லணியியலுட் பல சித்திரக்கவிகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுட் சதுரங்கபந்தமும் ஒன்று.

[சதுரங்கம் என்பது இங்கு ஒருவகை விளையாட்டினைக் குறிக்கும். அது, ஒருவரிசைக்கு எட்டறையாக எட்டுவரிசையில் ஒன்றோடொன்று இயைபுடையதாக அறுபத்துநான்கு அறை சமசதுரமாக வகுத்து அவற்றுள் முதல்வரிசையில் இரண்டுசகடு, இரண்டியானை, இரண்டு குதிரை, ஓரரசு, ஓரமைச்சு ஆகிய எட்டும் இரண்டாம் வரிசையில் காலாள் எட்டும் ஆகிய பதினாறுவட்டும் ஒருசார் படையாகவும், 7-ம் வரிசையில் காலாள் எட்டும், 8-ம் வரிசையில் முற்கூறியபடி சகடுமுத லிய எட்டும் ஆகிய பதினாறுவட்டும் மற்றொருசார் படையாகவும் இடை யில்நின்ற முப்பத்திரண்டு வெற்றரங்கும் இருவகைப்படையும் கலந்து பொரும் பொருகளமாகவும் வைத்துப் பொருது வெற்றி தோல்வியறி யும் ஒருவகை விளையாட்டாகும். இது கருநாடக முறையாகவும் மொகலாயமுறையாகவும் (இருவகைப்பட) விளையாடப்படுவதுண்டு.]

சதுரங்கபந்தமாவது:—அறுபத்துநான்கு எழுத்துக்களுடைய தாய்ச் சதுரங்கஅறை அறுபத்துநான்கனுள் ஏதேனும் ஒன்றிலிருந்து தொடங்கிச் சதுரங்க அறைகளிற் குதிரைமுதலியவற்றின் நடைமுறைப்படி அடைக்கும்போது சதுரங்கஅறைகளுள், கவிகருதியஇடத்துக் கவிகருதியவாறு இடையீடின்றிப் பாட்டுடைத்தலைவன் பெயரேனும் கவிகருதிய பிறவேனும் அழகுற அமைந்து விளங்குவதாய் இயற்றப்படும் செய்யுளாம்.

மாறனலங்காரம் வெளிவந்தநாண்முதல் *அதிலுள்ள சதுரங்கபந்தச் செய்யுளை அதன்கீழ்க்குறித்துள்ளவாறு சதுரங்கஅறைகளிலமைத்துக்காணவிரும்பிச் சதுரங்கஅறைகளில் இயலும் குதிரைமுதலியவற்றின் கதிவிவரங்களைச் சதுரங்கத்திற் பழக்கமுடையார் பலரிடம் யான் கேட்டறியமுயன்றுவந்ததில், சின்னாண்முன் எனது நண்பரும் பேரையூர்வாசியுமான ஸ்ரீமான் சி. வ. ஷண்முகஞ்செட்டியாரவர்கள், வெண்பாவும் நூற்பாவும் விரவிவர இயற்றப்பட்ட சதுரங்கநூல் எனப்பெயரிய பழையதமிழ்நூலொன்று தம்மிடத்து உண்டென்றும், அந்நூலில், சதுரங்க அறைகள் அறுபத்துநான்குக்கும் பெயர்களும், அவ்வறைகளில் நால்வகைப்படையும் அரசும் அமைச்சும் நடக்குமாறும், படைவகுப்பின்பெயர்களும், படைவகுக்குமாறும், படைவகுத்துப் பொருமாறும் விவரமாகக் கூறப்பட்டுள்ளனவென்றும் கூறி, அந்நூலிலிருந்து தாம் எழுதிவைத்திருந்த பல செய்யுள்களையும் படித்தும் சதுரங்க அறைமுழுதும் குதிரைமுதலியவை செல்லுமாற்றைவரைந்தும்விளக்கி, அவற்றை யான் எழுதிக்கொள்ளுமாறு தமது கையெழுத்துப்பிரதியையும் கொடுத்துதவினார்கள். இவர்கள் உதவி மிகவும் பாராட்டற்பாலது. இச்சதுரங்கவிவரங்களைச் செந்தமிழ்நேயரும் படித்துணருமாறு செட்டியாரவர்கள்பிரதியிற்கண்டபடி வெளியிடலானேன். இந்நூற்பிரதிகள் வைத்திருப்போர் கொடுத்துதவுவார்களாயின் இந்நூலை ஆராய்ந்து புத்தக உருவிற்பதிக்க உதவியாயிருக்கும். பின்வரும் இந்நூலின் முதற் செய்யுளால் இந்நூலினை ஆக்கியோர்பெயர் முதலியன ஒருவாறு விளங்கும்.

இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராதிபர்.

* ருOஉ-ம் பக்கம் பார்க்க.

ஸ்ரீ:

சதுரங்க நூல்.

பாயிரம்.

சதுரங்க நூல்வேண்டிச் சங்கத்தார் முன்னே
மதுரைநகர் மாறன் மதிக்க—முதிரும்
அகில முழுதெண்ணு மாரியத்திந் நூலைக்
கபில ருரைசெய்தார் கண்டு.

பொன்றருவா ருக்குப் புதல்வருக்குப் பூவுலக
நன்றரச ருக்காசா னன்மகற்கு—வென்றிச்
சதுரங்க நூலதனைத் தான்கொடுப்பர் நானு
முதிரங்க முற்றுமுணர்ந் தோர்.

நூல்.

அரசன் மந்திரி யானை குதிரை
யிருபுறஞ் சகடு மிவையெட் டடனே
காலா ளெட்டுங் காண்டக வைத்து
எதிரிபொரும் கருவி யெதிரே வைத்துப்
பொருகிற யூபப் பொற்பின் பெயரினை
ஒருவகை யாக வுரைப்பக் கேண்மின்
சலமிகு பெருந்திறற் சக்கர யூபம்
அலர்கதிர்க் காட்சி யந்தா யூபம்
மலர்மிகு சிறப்பின் மந்திர யூபம்
பலவரும் வகுக்கும் பற்ப யூபம்
அந்தமில் காட்சித் திந்திர யூபம்
இருநில மதிக்குங் கருமுகில் யூபம்
சிந்தையில் யதிக்குஞ் சித்திர யூபம்
பொருதிறல் வகுக்கும் புட்பக யூபமென்
றெண்வகை யூப மியம்பப் படுமே.

எண்வகைத் தான மெழில்பெற வமைத்தே
யிவையெட்டி லொன்றை யியல்பாக் கட்டில்
மாதொரு பாக மகிழ்ந்தினி தளிக்கும்
ஈசன் றனக்கு மிகல்வெலற் கரிதே.

அறுபத்துநான்குவீட்டுக்கும் பெயர்.

மதியே வாரணம் வார்சிலை வால்வளை
நுதியே தொட்டி நுண்கிடை யணங்கு
பதியே பார்ப்பான் பத்திரன் பாலே
வெதிரே களையே வேயே தட்டை
கதியே கருமுகில் கறையடி கைம்மா
பறையே படலிகை பைந்தளிர் பாணி
நெறியே நிலமு நெடுங்க லுணங்கல்
சிறையே சித்திரஞ் சீரே நாவாய்
நறையே நன்மலர் நளினம் நாடி
ஒளியே ஒள்ளிணை ஓரணி லோபன்
அளியே யந்தாம் அவனி யருங்கடல்
பனியே பருவரை பைந்தலை செந்தளிர்
முனியே முறுவல் முறுக்கொடு...ரகன்
செருவே செந்நெல் செய்நிதி திதலை
மருவே வாய்மை வரையே புரையிடம்
மந்திரி யிந்திரன் சுறவே சுந்தரம்
என்றிவை யறுபத்து நாலிடப் பெயரே.

சதுரங்கசேனைகளும் இராசாவும் மந்திரியும் நடக்குமியல்பு.

பகடு முகடோடப் பாய்மா விலங்கச்
சகடு மதனெதிர்தா னோட—இகல்வெல்லு
மந்திரிக்கு நாற்கோண மன்னவருக் கெண்டிசையாம்
அந்த விலக்கெறியு மாள்.

பறையினி னின்றநாய் பாங்கமை நூக்கி
னறையினி னின்றநாய் நூக்குங்—கறையடியைக்
கைம்மிகுத்து நூக்கிற் கலந்த கயந்தன்னை
மெய்ம்மிகுத்து வேறாக நூக்கு.

மதியினி னின்றநாய் வார்சிலையி னூக்கி
னுதியினி னின்றநாய் நூக்கும்—பதிவகையே
மந்திரியைக் குத்தில் மதியிலாட் டானூக்கி
இந்திரன்மேல் யானை யெறி.

கருமுகிற்க ணாய்நூக்கிற் கைம்மாவி னீயை
ஒருவகையா லோர்ந்தெதிரே நூக்கும்—ஒருவகையால்
மாயமா மாவெழுந்தால் மாமேல மந்திரிமுன்
நாயெழுந்து நூக்கும் நயந்து.

உலோபனினாய் நூக்கியிடி லோங்கி யெதிரே
யலோபனினா யாங்கெதிரே நூக்கும்—குலாவிவரும்
மாவெழுமே னீயு மருத்தெழுமே கைம்மாவை
மாவியென்ன வில்லை வரைந்து.

நெறிதனில் நின்றநாய் நேர்படவே நூக்கில்
அறிவுடைய மந்திரியார் நேரே—நெறிசெல்லுந்
தேரினையே விட்டுத் திறம்படவே பந்தித்துப்
போரினையே நோக்கிப் பொரு.

அந்தரத்தி லானை யெழுமே லதனெதிரே
சுந்தரத்தி லானை துணைநீக்கி—இந்தரமே
ஏறுமா றூறு மிகலா ரிகலறிந்து
மாறெதிரே நூக்காய் மகிழ்ந்து.

அதிராசை யங்கே புரியும்நாய் நூக்கி
யெதிராசை யிந்திரன்பால் வைத்தே—யதிராசை
தேரெழுமே மாவெழுநீ சென்னலா நூக்கிநின்ற
போரெதிரே யானை பொரு.

நுணங்கினி னின்றநாய் நூக்கி னெதிரே
யணங்கினாய் கொண்டெதிரிட் டாங்கே—மணங்கமழ்தார்
மந்திரியைக் குத்தி மதியினாற் றேர்நிறுவி
அந்தரமே லாகியறி.

இப்படிச் சொல்லு மிரண்டு வகைக்கருவி
யொப்புறப்பா ரித்தே யொருங்குபொரு—மப்பொழுது
சக்கரயூ பத்தின் பரிசுரைப்பன் சூழ்குழலாய்
இக்கணமே நாடி யினி.

படலிகை நின்ற நாய்படக் கொடுத்து
மறுதலை நின்ற மாவினை வெட்டி

வெட்டிய தேரினை மீள வாங்கி
அரசன் முன்பா லணிபெற நிறுத்தி
விண்மகிழ் மந்திரி வேயிட நிறுத்திச்
சித்திரந் தன்னிற் றிருந்துமா நிறுத்தி
சட்டையர் தன்னிற் றரணிமா நிறுத்தி
சாபச் சீர்பெறுஞ் சக்கர யூபம்.

அந்தமில் காட்சி யந்தர யூபஞ்
சிந்தை யதனிற் றெரியக் கூறுவன்
அரசன் வலத்தி லானை யெழுந்திட்
டாநினை நாடி யாகக் கூட்டித்
தெய்வ வனிலே தேர்சில நிறுத்தில்
அந்தர யூப மாங்கது வீரும்.

மந்திர யூபம் வகைநிறு வும்படி
முந்தையோ ருரைத்த முறையிற் கூறுவன்
முன்ற நிலைபெற வெதிரி லரசனை
யெதிரி யரசனை யெதிரே நிறுத்தி
வால்வளை தன்னில் மந்திரி குத்தில்
நுதியினி னுயை நூக்கப் படுத்து
மதியினின் மந்திரி யாளொடு புணர்ந்து
விதிமே லானை மேற்பட விழுந்தால்
மதியொரு மந்திர யூப மாகும்.

பலவாய் வகுக்கும் பற்ப யூபம்
மலர்தலை யுலகின் மானக் கூறுவன்
... ...
... ...
... ...
... ...

தந்திரயூபஞ் சாற்றக் கேண்மின்
குலுங்கல் மேலே குதிரை யெழுமேல்
கலங்கல் நின்று காதற் பிரிவினை
நின்றடி மனையின் மந்திரி கட்டிற்
கூறிய தந்திர யூப மாகும்.

சிந்தையின் மதிக்குஞ் சித்திர யூபம்
அந்த மின்றி யமருடன் கூறுவன்
நாவா யெதிரே நாவாய் நூக்கின்
மேவார் மனைக்கண் மதித்தே நாட்டி
ஓவா நாயினை யொள்ளினை நிறுத்திப்
பாவாய் புலவர் பரிசிற் பேறு
ஓவாது சித்திர யூப மாகும்.

காண்டகு சிறப்பிற் கருமுகில் யூபம்
ஆங்கது தன்னை யடைவிற் கூறுவன்
மூர்க்கினைப் பகடுடனேயெழுந்து?
தாக்கு நாயினைத் தனுமணிக் குத்தித்
தனுவினி னின்றநாய் தன்னை யனுவுற
அந்தரந் தன்னிற் பொருநாய் நிறுத்தில்
உந்தியங் கருமுகில் யூப மாகும்.

பொருதிறல் வகுத்த புட்பக யூபம்
ஒருவகை யாத னுரைப்பக் கேட்டி
பைந்தலை நின்ற பரியினைத் தேரும்
மந்திரி கூட்டி வகைபெற நின்ற
சுந்தர வாளினைத் துணைபெற நீக்கி
யாதெனும் நீக்கி யாகமா யத்தினை
விரிபெறக் கட்டிப் பரியினை யெழுமோ
மந்திரி குத்தி வகைபெறச் சொன்ன
புந்தியில் வகுத்த புட்பக யூபம்.

இப்படி யூபங்கள் வகுத்து விளையாடினால்
மாற்றலன் கருவி யார்த்தெழு மாயினும்
எழுந்தவை யெழுந்தவை யியல்புறப் படுமே
பற்றிப் பார்க்கில் நூக்கிற் பொருது
வெற்றி கொள்வர் வியனிலத் தோரே.

இனிச் சதுரங்க அறைகளில் நால்வகைப்படையும் அமைச்சும் அரசும் நடக்குமாறு:—

I. (1) அறுபத்துநான்கறைக்கும் குதிரைபாயுமாறு:—

1, 18, 33, 50, 60, 54, 64, 47, 32, 15, 5, 20, 10, 25, 42, 57, 51, 61, 55, 40, 23, 8, 14, 4, 19, 2, 17, 34, 49, 59, 53, 63, 48, 31, 16, 6, 12, 22, 37, 27, 21, 38, 44, 29, 46, 36, 30, 45, 35, 52, 62, 56, 39, 24, 7, 13, 3, 9, 26, 41, 58, 43, 28, 11.

[மேலேகாட்டிய எண்கள் குதிரைபாயும் சதுரங்க அறைகளை முறையே குறிப்பனவாம். இம்முதலறையன்றி வேறு எவ்வறையிலிருந்தேனும் குதிரையை அறுபத்துநான்கு அறைக்கும் நடத்தலாம். அவ்வாறு நடத்துமிடத்து, நாம் எந்த அறையிலிருந்து குதிரையை நடத்த விரும்புகிறோமோ அந்த அறையிற் குதிரையைநிறுத்தி மேலேகாட்டிய எண்களுள் அவ்வறையைக்குறிக்கும் எண்ணுக்குப்பின்னுள்ள எண்களாற் குறிப்பிடப்படும் அறைகளின் வழியாக இறுதியெண்ணாற் குறிப்பிடப்படும் அறைவரையும், பின் முதல் எண்ணாற் குறிப்பிடப்படும் அறையிலிருந்து நாம் தொடங்கிய அறையைக்குறிக்கும் எண்ணுக்கு முன்னுள்ள எண்ணாற் குறிப்பிடப்படும் அறைவரையும் மண்டலித்து நடத்திக்கொள்ளவேண்டும். இம்முறை இரண்டுமுதல் ஏழுவரையுள்ள நடைவிகற்பங்களுக்கும் ஒக்கும். இவற்றுட் சிலவற்றைப் பின்வரும் படங்களிற்காண்க. விரிவஞ்சி மற்றவற்றுக்குப் படங்கள் அமைத்துக் காட்டப்படவில்லை.]

(2) மத்தியில் நான்கு வீடுவிட்டு அறுபதுவீட்டுக்குக் குதிரை பாயுமாறு:—

2, 17, 27, 33, 18, 1, 11, 5, 15, 21, 4, 10, 20, 14, 8, 23, 6, 12, 22, 16, 31, 48, 38, 32, 47, 64, 54, 44, 61, 55, 45, 30, 40, 46, 63, 53, 59, 49, 34, 51, 57, 42, 52, 62, 56, 39, 24, 7, 13, 3, 9, 26, 41, 58, 43, 60, 50, 35, 25, 19.

(3) மத்தியில் எட்டுவீடு இரண்டுவரிசையில் விட்டு ஐம்பத்தாறுவீட்டுக்குக் குதிரைபாயுமாறு:—

2, 17, 27, 33, 43, 49, 34, 19, 9, 3, 18, 1, 11, 26, 41, 58, 52, 62, 56, 39, 24, 7, 13, 30, 15, 5, 22, 32, 47, 64, 54, 60,

50, 35, 25, 10, 4, 14, 8, 23, 40, 55, 61, 51, 57, 42, 59, 53, 38, 48, 63, 46, 31, 16, 6, 12.

(4) மத்தியில் ஒருவீதிவிட்டு ஐம்பத்தாறுவீட்டுக்குக் குதிரைபாயுமாறு:—

6, 21, 27, 10, 25, 42, 57, 51, 61, 55, 40, 46, 29, 14, 8, 23, 38, 32, 15, 30, 47, 64, 54, 37, 22, 5, 11, 1, 18, 3, 13, 7, 24, 39, 56, 62, 45, 35, 50, 33, 43, 58, 41, 26, 9, 19, 2, 17, 34, 49, 59, 53, 63, 48, 31, 16.

(5) மத்தியில் நான்குவீடும் அகன் திசைகளில் இரண்டிரண்டு வீடும் விட்டு ஐம்பத்திரண்டுவீட்டுக்குக் குதிரைபாயுமாறு:—

2, 17, 34, 49, 59, 53, 63, 48, 31, 16, 6, 23, 8, 14, 4, 10, 25, 42, 57, 51, 61, 55, 40, 46, 52, 62, 56, 39, 24, 7, 13, 19, 9, 3, 18, 1, 11, 26, 41, 58, 43, 33, 50, 60, 54, 64, 47, 32, 15, 5, 22, 12.

(6) மத்தியில் நான்குவீடும் இரண்டாவதுவீதிமத்தியில் இரண்டிரண்டுவீடும் விட்டு ஐம்பத்திரண்டுவீட்டுக்குக் குதிரைபாயுமாறு:—

27, 33, 50, 60, 54, 64, 47, 32, 15, 5, 11, 1, 18, 35, 25, 42, 57, 51, 41, 58, 43, 49, 59, 44, 61, 55, 40, 30, 45, 62, 56, 46, 63, 48, 38, 23, 8, 14, 24, 7, 22, 16, 6, 21, 4, 10, 20, 3, 9, 19, 2, 17.

(7) மத்தியில் இரண்டுவீதியிற் பன்னிரண்டுவீடுவிட்டு ஐப்பத்திரண்டுவீட்டுக்குக் குதிரை பாயுமாறு:—

5, 20, 10, 27, 44, 61, 55, 45, 35, 50, 60, 43, 49, 59, 42, 57, 51, 41, 58, 52, 62, 56, 46, 63, 48, 54, 64, 47, 53, 38, 21, 4, 14, 8, 23, 6, 16, 22, 12, 2, 17, 11, 1, 18, 3, 9, 19, 13, 7, 24, 30, 15.

(8) மூலையொன்றுக்கு ஒவ்வொருவீடும் மூன்றாவதுசுற்றில் மூலை ஒவ்வொருவீடும் மத்தியில் நான்குவீடும் விட்டு ஐம்பத்திரண்டுவீட்டுக்குக் குதிரைபாயுமாறு:—

7, 13, 3, 9, 26, 41, 58, 52, 42, 59, 49, 34, 51, 61, 55, 40, 30, 15, 32, 47, 53, 63, 48, 54, 44, 38, 23, 6, 16, 31, 14, 20, 5, 11, 21, 4, 10, 25, 35, 18, 12, 2, 17, 27, 33, 50, 60, 45, 62, 56, 39, 24.

(9) உருவுவெளி மூலைக்குமூலை பதினாறுவீடுவிட்டு நாற்பத்தெட்டு வீட்டுக்குக் குதிரைபாயுமாறு:—

2, 17, 27, 33, 18, 3, 9, 26, 11, 5, 20, 35, 25, 42, 52, 58, 41, 51, 61, 44, 34, 49, 59, 53, 63, 48, 54, 60, 45, 62, 56, 39, 24, 7, 13, 23, 40, 30, 47, 32, 38, 21, 4, 14, 31, 16, 6, 12.

(10) மூலையொன்றுக்கு நான்குவீடுவீதம் நான்குமூலைக்கும் பதினாறுவீடுவிட்டு நாற்பத்தெட்டுவீட்டுக்குக் குதிரை பாயுமாறு:—

5, 22, 32, 47, 62, 52, 42, 25, 19, 4, 14, 24, 39, 54, 60, 43, 37, 31, 48, 38, 21, 6, 12, 29, 44, 59, 53, 36, 30, 45, 28, 34, 17, 27, 33, 18, 35, 20, 3, 13, 23, 40, 46, 61, 51, 41, 26, 11.

(11) மூலையொன்றுக்கு நான்குவீடும் மத்தியில் நான்குவீடும் விட்டு நாற்பத்துநான்குவீட்டுக்குக் குதிரை பாயுமாறு:—

3, 13, 23, 40, 46, 61, 51, 41, 26, 11, 5, 22, 32, 47, 62, 52, 42, 25, 19, 4, 14, 24, 39, 54, 60, 43, 33, 27, 17, 34, 44, 59, 53, 38, 48, 31, 21, 6, 12, 18, 35, 20, 30, 45.

(12) மூலையொன்றுக்கு ஐந்துவீடுவீதம்விட்டு நாற்பத்துநான்கு வீட்டுக்குக் குதிரைபாயுமாறு:—

4, 10, 25, 35, 50, 60, 45, 55, 40, 30, 15, 5, 11, 21, 27, 12, 18, 33, 43, 53, 47, 32, 22, 28, 34, 51, 61, 46, 31, 14, 20, 26, 36, 42, 52, 37, 54, 39, 29, 44, 38, 23, 13 19.

(13) மூலையொன்றுக்கு ஐந்துவீடும் மத்தியில் நான்குவீடும்விட்டு நாற்பதுவீட்டுக்குக் குதிரைபாயுமாறு:—

4, 19, 25, 42, 52, 46, 40, 23, 13, 30, 47, 32, 15, 5, 20, 10, 27, 33, 50, 60, 54, 39, 22, 12, 18, 35, 45, 51, 34, 44, 61, 55, 38, 53, 43, 26, 11, 21, 31, 14.

(14) மத்தியில் நான்குவீடும் சுற்றில் நன்னான்குவீடும் இரண்டாவது சுற்றில் மூலைக்கு ஒவ்வொருவீடும் விட்டு நாற்பதுவீட்டுக்குக் குதிரை பாயுமாறு:—

17, 27, 42, 57, 51, 41, 58, 43, 49, 59, 44, 54, 64, 47, 30, 45, 62, 56, 46, 63, 48, 38, 23, 8, 14, 24, 7, 22, 16, 6, 21, 11, 1, 18, 35, 20, 3, 9, 19, 2.

(15) மத்தியில் நான்குவீடும் மூலையொன்றுக்கு நன்னான்குவீடும் இரண்டாஞ்சுற்றுமத்திகளில் இரண்டிரண்டுவீடும் விட்டு முப்பத்தாறுவீட்டுக்குச் குதிரைபாயுமாறு:—

3, 18, 33, 43, 60, 4, 48, 38, 32, 22, 5, 11, 17, 27, 42, 59, 44; 61, 46, 40, 23, 6, 21, 4, 19, 25, 35, 41, 51, 45, 62, 47, 30, 24, 14, 20.

(16) சுற்றி ஒருவீதிவிட்டு முப்பத்தாறுவீட்டுக்குக் குதிரைபாயுமாறு:—

10, 20, 14, 31, 16, 52, 42, 36, 21, 15, 30, 47, 53, 43, 26, 11, 28, 38, 55, 45, 51, 34, 19, 13, 23, 29, 39, 54, 44, 50, 35, 18, 12, 22, 37, 27.

(17) ஒருபாதி நான்குவரிசைவிட்டு மற்றப்பாதி முப்பத்திரண்டு வீட்டுக்குக் குதிரை பாயுமாறு:—

1, 11, 5, 15, 32, 22, 7, 24, 30, 13, 28, 18, 3, 9, 26, 20, 10, 25, 19, 2, 17, 27, 12, 29, 14, 8, 23, 6, 16, 31, 21, 4.

(18) சுற்றி ஒருவீதியும் அடுத்தவீதியில் நான்குமூலையும்விட்டு முப்பத்திரண்டுவீட்டுக்குக் குதிரைபாயுமாறு:—

12, 18, 35, 52, 46, 31, 14, 20, 26. 43, 53, 38, 23, 29, 44, 54, 37, 47, 30, 36, 42, 27, 21, 11, 28, 13, 19, 34, 51, 45, 39, 22.

(19) மூலைக்கு ஐவைந்துவீடும் இரண்டாவதுசுற்றுமத்திகளில் இரண்டிரண்டுவீடும் மூன்றாவதுசுற்றில் மூலைக்குஒவ்வொருவீடும் மத்தியில் நான்குவீடும்விட்டு இருபத்தெட்டுவீட்டுக்குக் குதிரைபாயுமாறு:—

10, 27, 42, 25, 35, 18, 33, 50, 44, 54, 60, 45, 51, 61, 55, 38, 23, 40, 30, 47, 32, 15, 5, 11, 21, 4, 14, 20.

(20) சுற்றுவீதி நான்கும் அதற்கடுத்தவீதியில் மூலையொன்றுக்கு மும்மூன்றுவீடும்விட்டு இருபத்துநான்குவீட்டுக்குக் குதிரைபாயுமாறு:-

12, 22, 37, 52, 46, 31, 21, 36, 26, 43, 53, 38, 28, 13, 30, 20, 35, 45, 39, 29, 19, 34, 44, 27.

(21) சுற்றுவீதிநான்கும் அடுத்தவீதியில் மூலைக்குமூன்றுவீடும் மத்தி நான்குவீடும்விட்டு இருபதுவீட்டுக்குக் குதிரைபாயுமாறு:—

12, 22, 39, 45, 35, 52, 46, 31, 21, 38, 53, 43, 26, 20, 30, 13, 19, 34, 44, 27.

II. குதிரையும் மந்திரியும் அறுபத்துநான்குவீட்டுக்கும் பாயுமாறு:—

2, 17, 26, 41, 34, 49, 58, 52, 59, 53, 62, 56, 63, 48, 39, 24, 31, 16, 7, 13, 6, 21, 30, 45, 38, 44, 35, 29, 22, 37, 46, 36, 43, 28, 19, 25, 18, 33, 42, 57, 50, 60, 51, 61, 54, 64, 55, 40, 47, 32, 23, 8, 15, 5, 14, 4, 11, 1, 10, 20, 27, 12, 3, 9.

III. அறுபத்துநான்குவீட்டுக்கும் சகடும் குதிரையும் பாயுமாறு:—

1, 19, 4, 18, 3, 17, 27, 9, 26, 12, 2, 20, 5, 23, 8, 22, 32, 14, 29, 15, 21, 7, 24, 6, 16, 30, 13, 31, 37, 55, 40, 54, 64, 46, 61, 47, 62, 48, 38, 56, 39, 53, 63, 45, 60, 42, 57, 43, 33, 51, 36, 50, 44, 58, 41, 59, 49, 35, 52, 34, 28, 10, 25, 11.

IV. அறுபத்துநான்குவீட்டுக்கும் சகடும் ஆனையும் பாயுமாறு:—

1, 19, 18, 4, 3, 17, 25, 11, 12, 26, 34, 52, 60, 42, 43, 57, 49, 35, 36, 50, 51, 33, 41, 59, 58, 44, 45, 63, 62, 48, 40, 54, 55, 37, 38, 56, 64, 46, 47, 61, 53, 39, 31, 13, 5, 23, 22, 8, 16, 30, 29, 15, 14, 32, 24, 6, 7, 21, 20, 2, 10, 28, 27, 9.

V. மந்திரியும் அரசும் அறுபத்துநான்குவீட்டுக்கும் பாயுமாறு:—

4, 11, 10, 1, 2, 9, 17, 26, 18, 25, 33, 42, 34, 41, 49, 58, 57, 50, 51, 60, 59, 52, 44, 35, 43, 36, 28, 19, 27, 20, 21, 30, 22, 29, 37, 46, 38, 45, 53, 62, 61, 54, 55, 64, 63, 56, 48, 39, 47, 40, 32, 23, 31, 24, 16, 7, 8, 15, 14, 5, 6, 13, 12, 3.

VI. அறுபத்துநான்குவீட்டுக்கும் சகடு, குதிரை, மந்திரி, யானை பாயுமாறு:—

4, 18, 1, 10, 11, 25, 19, 28, 36, 50, 33, 42, 43, 57, 51, 60, 52, 34, 49, 58, 59, 41, 35, 44, 45, 63, 48, 39, 38, 56, 62, 53, 61, 47, 64, 55, 54, 40, 46, 37, 29, 15, 32, 23, 22, 8, 14, 5, 13, 31, 16, 7, 6, 24, 30, 21, 20, 2, 17, 26, 2, 7, 9, 3, 12.

I. (1 a)

1	26	57	24	11	36	55	22
58	13	64	37	56	23	10	35
27	2	25	12	41	38	21	54
14	59	40	63	44	47	34	9
3	28	49	46	39	42	53	20
60	15	62	43	48	45	8	33
29	4	17	50	31	6	19	52
16	61	30	5	18	51	32	7

I. (1 b)

20	45	12	43	30	55	10	41
13	32	19	56	11	42	29	54
46	21	44	31	60	57	40	9
33	14	59	18	63	2	53	28
22	47	4	1	58	61	8	39
15	34	17	62	3	64	27	52
48	23	36	5	50	25	38	7
35	16	49	24	37	6	51	26

I. (5)

36	1	34	15	50	11	30	13
33	16	37	52	31	14	49	10
2	35	32			51	12	29
17	38					9	48
42	3					28	23
39	18	41			24	47	8
4	43	20	25	6	45	22	27
19	40	5	44	21	26	7	46

I. (11)

		1	20	11	38		
		10	39	2	21		
29	40	19	42	37	12	3	22
18	9	28			43	36	13
27	30	41			34	23	4
8	17	26	31	44	5	14	35
		7	16	33	24		
		32	25	6	15		

I. (14)

33	40	37			30	27	24
38		32			25		29
1	34	39	36	31	28	23	26
		2			15		
		35			22		
6	3	8	11	16	19	14	21
9		5			12		18
4	7	10			17	20	13

I. (21)

			1	16			
		17	14	9	2		
	13	20			15	8	
	18	5			10	3	
		12	19	4	7		
			6	11			

V.

4	5	64	1	60	61	56	57
6	3	2	63	62	59	58	55
7	9	28	30	31	33	52	54
10	8	29	27	34	32	53	51
11	13	24	26	35	37	48	50
14	12	25	23	38	36	49	47
15	18	19	22	39	42	43	46
17	16	21	20	41	40	45	44

VI.

3	58	63	1	48	53	52	46
62	4	5	64	49	47	42	51
59	2	7	57	56	45	44	54
6	60	61	8	41	55	50	43
11	18	23	9	40	29	28	38
22	12	13	24	25	39	34	27
19	10	15	17	32	37	36	30
14	20	21	16	33	31	26	35

கம்பர் திருநாள்.*

தமிழிலக்கியசரித்திரத்திலே கம்பர்பெருமானது இராமாயண அரங்கேற்றத்தோடு எல்லாவகையினும் ஒத்த சிறப்புடைய பிறிதொருநிகழ்ச்சி இல்லையெனக்கூறுதலே தகும். இதனோடு ஒருவகையான் ஒப்பிடத் தக்கது வள்ளுவப்பெருந்தகையார் தமிழ்வேதம் அருளிச்செய்த பெருநிகழ்ச்சி யென்பது யாவரும் அறிவர். தெய்வப்புலமைத் திருவள்ளுவரது அறிவின்மாட்சி அதிசயிக்கத்தக்கதே. அவரது பேரறிவு எத்துணைப்பெரியாரையும் தலைவணக்குமியல்பினது. தேவிற் சிறந்த திருமாலைப்போல, இத் தெய்வப் பெரும்புலவரும் தமது நுண்ணிய மாட்சிமிக்க புலங்கொண்டு அறிவுலகினை முற்ற அளந்து எல்லைகண்டனர். மக்கட்கு உறுதிபயப்பனவற்றை ஆணிமுத்தன்ன செஞ்சொற்களால் தெளித்துத் தந்தருளினர். வாழ்வின் பெருநோக்கங்களை அகன்று கூர்த்துவிளங்கும் தமது அறிவினாற்றலாலும், பரந்து கடைபோகிய தமது கல்வி கேள்விகளின் பெருமையினாலும், ஆழ்ந்து சிறந்து முதிர்ந்த தமது அனுபவவாயிலாலும், நுண்ணிதின் ஆராய்ந்துதெரிந்து தமிழ் மக்கட்கு உதவியருளினர். எவ்வகையினருக்கும் எவ்வகைநிலையினும் துணைநின்றுதவும் அறிவுரைக் களஞ்சியமொன்றினை அளித்தருளினர் இவ் அருட்பெருஞ்செல்வர். இவர் இயற்றித்தந்த திருக்குறட் பெருநூலிற்காணும் ஒவ்வொருகுறளும் தனித்தனியே செப்பஞ்செய்யப் பெற்றதோர் மணியே யாகும். ஒவ்வொரு குறள்மணியும் உள்ளத்திருளகற்றி யொளி நந்தன்மையது. ஓத இனிதாயும், கேட்க இனிதாயும், உணர இனிதாயும் உள்ளது இத் தெய்விகப்பெருநூல். இதனை யியற்றியருளிய புலமைத் தெய்வத்திற்குக் கோயிலெடுத்துப் போற்றியும் அவர் திருவவதாரஞ் செய்தருளிய திருநாளினைத் தமிழ்மக்களது விசேஷதினங்களுள் ஒன்றாகப்பாராட்டியும் வருவது தமிழுலகத்திற்கு ஓர் பெருமையாகவே என்றும் உள்ளதாகும்.

---

* இவ் வருஷத்துப் பங்குனியத்தநாளில் (29-3-26) சேதுஸம்ஸ்தான மஹாவித்வான் ஸ்ரீ. ரா. இராகவையங்காரவர்கள்முன்னிலையில், திருநெல்வேலித் தமிழிலக்கியசங்கத்தினர் நடத்திய கம்பர்திருவிழாவில் வாசிப்பதற்கு இப் பாவனைக்கட்டுரை எழுதப்பெற்றது.

இத் தெய்வப்புலவரது திருவடிப்பரிசத்தால் தமிழுலகு பரிசுத்த மெய்தியதற்குப் பலநூற்றாண்டுகட்கு முன்பாகவே, அவர் வகுத்தருளியது போன்ற உத்தமவாழ்வின் பெருவிதிகளுக்குத் தனிநிலைக்களமாகிய புருஷோத்தம னொருவனைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று பாரதமாதா பெருந்தவம் புரிந்துவந்தனள். ஆரியசமுதாயத்தின் மனோபாவனையானது தானறிந்த ஜாதீயவீரர்களுக்குள் இப்புருஷோத்தமனை நிச்சயிப்பதன்கண்ணும் அவனது சரித்திரத்தினைக் கோவைப்படுத்து அலங்கரிப்பதன்கண்ணும் அநேகநூற்றாண்டுகளாக முயன்று வந்தது. இம் முயற்சியின்பயன் முதன்முதல் உருவம் பெறத்தொடங்கியது வால்மீகிமஹரிஷியின்காலத்தேதான். 'ஆதிகவி' யென்று இப்பொழுது போற்றப்படும் இம் மஹான் தமது அத்பற்புத கவித்வ சக்தியினாலே ஆரியாவர்த்தத்திற் பரந்து வழங்கிய அச் சரித்திரங்களையெல்லாம் ஒருநிலைப்படுத்து அழகுபெறப் புனைந்து இராமாயணமெனப் பெயர்தந்து இதிஹாஸமாக இயற்றித்தந்தருளினர்.

இம் மஹரிஷியின்காலத்திற்குப் பின்பு, ஆரியசமுதாயம் விரிந்து பெருகியது; பரதகண்டமுழுவதும் பரந்துசென்றது. தனித்தனியாய்ப் பலவேறிடங்களில் வாசஞ்செய்துகொண்டிருந்த சமுதாயங்கள் பல ஆரியசமுதாயத்தோடொன்றுபடவே, இந்துசமுதாயமென்னும் சிறப்புடைப் பெருஞ்சமுதாயமொன்று பரிணமித்தெழுந்தது. இச் சரித்திரகதிக்குத் தமிழசமுதாயமும் உட்பட்டு இந்துசமுதாயத்தின் உத்தமஅங்கங்களுள் ஒன்றாக விளங்கத் தலைப்பட்டது. தனித் தமிழ் மக்கள் உயரிய நாகரிகம்படைத்தவர்; இயற்கைமதிநலம்முதலிய அருஞ்சிறப்புக்கள் பெரிதும் வாய்ந்தவர்; கவித்வசக்தி நிரம்பவுடையவர். இந்துசமுதாயத்தின்பெருமை இத் தனித்தமிழ்மக்களது கலப்பினால் மிக அதிகரித்தது; அதன் ஆத்மசக்தி உரமிகுந்தோங்கியது; அதன் பாவனாசக்தி வளம்பயின்று விரைவுகொண்டு புதுமைநாடியது; அதன் கவித்வசக்தி நூற்றுக்கணக்கான விவித வர்ணங்களுடன் அதிமனோஹரமான ரூப வைசித்திரியங்களாகத் தோற்றஞ்சான்று நின்றது. தமிழப் பண்பு மிக்க திராவிட இந்து சமுதாயத்தின் உள்ளத்தே புதிய உணர்ச்சிகள் கிளர்ந்து பரந்தன; பௌத்தமதம் பாவலுற்றது; ஜைனசமயம் நிலைபெறவிரும்பிப் பெரிதும் முயன்றது. வைதிகசமயம் ஆழ்ந்து

நிலைகூடி வெற்றியை யெதிர்நோக்கிநின்றது. வீரமுங் காதலும் விளைந்த தமிழ்நிலத்தே இப்பொழுது அன்பும் அருளும் விளைவுபெறத் தொடங்கிற்று. பக்தி ஊற்றுக்கண் திறந்து சுரந்து பெருகுவதாயிற்று. இங்ஙனமாக, இரண்டு ஜீவநதிகள் ஒன்றுகூடிப் பெருகி ஓடுவதைப் போல, ஆரியர்நாகரிகமும் தனித்தமிழர்நாகரிகமும் பேதமின்றிக் கலந்து ஒன்றுபட்டுத் தமிழ்நாட்டிலே பிரவஹிப்பதாயிற்று. காலம் விரைந்துசென்றது. நாகரிகக்கலப்பின் ஆரம்பத்தில் நிகழ்ந்த கலகம், பரபரப்பு முதலியன யாவும் நாளடைவில் மறைந்தொழிந்தன. தக்ஷிண இந்துசமுதாயவாழ்வு அமைதியுற்றுச் சென்றது. தமிழ்மக்கட்குரிய மனப்பண்பு, அநுபவம், நாகரிகம் இவற்றிற்குத் தக்கவாறும், காலகதியின் விளைவுக்குத் தக்கவாறும், நூதன சிருஷ்டிகள் முளைத்துச் செழித்தன. பழமையும் பெருமையும் பொருந்திய இருபெரு நாகரிகங்கள் ஒன்று பட்டதன் முதற் பெரும்பயனாக வள்ளுவரென்னும் புலமைத்தெய்வம் தோன்றித் தமிழ்வேதத்தை அருளிச்செய்து மறைந்து சென்றது. பாரதமாதாவின் கனவு நனவாகுங் காலம் நெருங்கியது.

பன்னெடுங்காலமாக ஆரியசமுதாயத்தின் உள்ளத்தே ஊறிக் கிடந்து வால்மீகிமஹரிஷிபால் உருவமைந்த இராமசரிதம் இப்பொழுது தன் பூர்வகதியை யனுசரித்துத் தக்ஷிண இந்துசமுதாயத்தின் உள்ளப் பரப்பிலேயும் அழுந்திக்கிடந்து ரஸம் ஊறிக் கனிவதாயிற்று. புதுவதாகிய மனோபாவனையால் புதுக்கோலம் புனையப்பெற்றது. பாரததேவி அரிதிற் றெரிந்துகொண்ட புருஷோத்தமனது சிறந்த குணவிசேஷங்கள் நன்கு புலப்படுமாறு நூதனசம்பவங்கள் அழகுபெறச் சேர்க்கப்பெற்றன. இராமபிரானது அபூர்வ குணாதிசயங்களும், அரிய வீரச்செயல்களும், தியாகபுத்தியும், மக்களது உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. இவரது பேரொளித்திருமேனியானது தெய்வமணத்தாற் கமழ்ந்தது. உயரிய மக்கட்பண்பும், உயரிய தெய்வப்பண்பும் ஒருங்கு சிறந்து விளங்கத் தொடங்கின. இவரது மஹிமையும் பூர்த்தியெய்தியது. பக்தி நிரம்பிய நம் மூதாதையர்களது உள்ளத்தே இராமபிரான் தெய்வமாகவே குடிகொண்டுநின்றனர். இராமசரிதத்தில் வழங்கிய இதர கதாபாத்திரங்களின் குணவிசேஷங்களும் சிறிது சிறிது பேதமெய்தின. இராமாயணம் பலவகையாலும் செப்பமெய்தி ஜனஸமூகத்தில் வழங்கலாயிற்று. நாடகமாகவும் நடித்துவரப்பெற்றது. நடிக்கப்பெறவே,

இத்திவ்வியசரிதம் புதுநலங்கனிந்து ததும்புவதாயிற்று. கல்லிடைகளிலே கசிந்து பிறந்து சிற்றருவியாய்ச் சிற்றோடையாய்ப் பேருருவியாய்ப் பேரோடையாய்ப் பின்னர் நதியாய்ப் பல சிறுநதிகளோடு சங்கமித்துப் பெருநதியாய் இருகரையும் புரண்டு பெருக்கெடுத்தோடும் மாரிக்காலத்துப் பேராறுபோல, இராமசரித்திரமும் ஆரியசமுதாய வுள்ளத்தின் அடிப்பரப்பிலே சிறிதளவிற் றோன்றிப் பின் நாளாவர்த்தியில் வரவரப் பெருகி நிரம்பித் தக்ஷிணத்திற் கரைததும்பிப் பெருக்கெடுத்துச் செல்லுவதாயிற்று. ஆயிரக் கணக்கான வருஷங்களுக்குமுன் சமுதாய வுள்ளத்தில் இடப்பெற்ற இராமகதையின்வித்தானது முளைத்துச் செழிப்புற வளர்ந்தோங்கித் திண்ணிய கவடுகள் பல திசைதொறும் போக்கிப் பசேலெனத் தழைத்துத் தண்ணிழல் பரப்பி வானளாவிநின்று தனது பூர்ண ஆகிருதியை யடைந்தது. தக்ஷிண இந்துசமுதாயத்தின் உள்ளப்பரப்பிலே கருத்துலகிலே இராமசரிதம் மேற்கூறியவாறு அங்க பரிபூர்த்தியை யெய்தியபோதிலும், வாசாரூபமான காவியவுலகிலே தக்க கோலத்தோடு வெளிப்பட்டுத்தோன்றவில்லை. வாசாரூபமாகப் புலப்படுதற்கு உத்தமப் பெருங்கவிஞ னொருவனை அவாவிநின்றது.

இந் நிலையிலே, தென்னாடுசெய்த அருந்தவத்தினாலும், தமிழன்னை பன்னெடுங்காலமாகத் திரட்டிவைத்த அரும் புண்ணியத்தின் பெரும் பயனாலும், கம்பர்பெருமான் தோன்றியருளினர். அவரது ஜனனத்தைத் 'தெய்வத்தோற்றம்' என்றுதான் விசேடித்துக்கூறவேண்டும். பிரகிருதி தேவி தனது அருள்வளம் அனைத்தையும் இவர்பால் வரையாது பொழிந்தனள். 'கருவிலேதிருவுடையவர்' என்பதற்கு இவரிடத்தன்றி யேனையோர்பாற் பொருள் நிரம்பக் காணுதலரிது. இயற்கையிலேயே பேரறிவு படைத்தவர். 'தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு' என்பது பொய்யாமொழியாகலின், தம்காலத்து வழங்கிய அருங்கலைகளனைத்தையும் முற்றக்கற்றுத் தமது அறிவினது அளவினையும் ஆற்றலையும் முன்பின் ஒப்பின்றிப் பெருக்கிக்கொண்டனர். தமது தாய்மொழியை முற்றக் கற்றதனோடு அமையாது, வடமொழிப் பயிற்சியும் நிரம்பவாய்ந்து விளங்கினர். தம்மோடு ஒப்பாரு மிக்காருமில்லாத பெருங்கல்வியாளராய்ப் புலமை முற்றிய காரணத்தினாலே, 'கல்வியிற்பெரியவன் கம்பன்' என்னும் முதுமொழி காலதேசவர்த்தமானத்தால் அளவுபடாதவோர் பொதுவுண்மையாய் வழங்குதலாயிற்று.

உணர்ச்சிவலி முதலிய பிற மனநலங்களும் இவர்பால் நிரம்பியிருந்தன. மக்களது உள்ளமாகிய வீணையில் எத்தனை வகையான உணர்ச்சிபேதங்கள் எழக்கூடுமோ அவையனைத்தும் தமது சங்கல்பமாத்திரையினாலே எழுந்து இனிது சப்திக்கச்செய்யும் பேரிசையாண்மை பெற்றனர். அகத்தும் புறத்தும் காணப்படுகின்ற சௌந்தர்யவைபவங்கள் அனைத்தையும் நுண்ணிதினுணர்ந்து ஆழ்ந்தனுபவித்து ஆனந்தசரீரியாய்த் தோன்றினர். இவரது பாவனாசக்தி எல்லையின்றி அகன்று பரந்தது; கொள்ளக்குறையாத பெருங்கடல்போன்றது; எவ்வுலகத்தினுஞ்சென்று சஞ்சரிக்கவல்லது; எவ்வகைப்பொருளினையும் எவ்வகைநிலையினையும் மனக்கண்முன்னே தெளிவாய்ப் புலப்படுத்துச் சித்திரிக்கும் சிறப்பியல் வாய்ந்தது. அறிவின்பெருமையினாலும், உணர்வின்பெருமையினாலும், பாவனாசக்தியின்பெருமையினாலும், இவரது கவித்வசக்தி முதிர்ந்து கனிந்தது. ஸ்வரங்களும், ராகங்களும், வர்ணங்களும், கீர்த்தனங்களும் ஒன்றின்மேலொன்றாய்ப் படிப்படியாய் இசைச் செல்வத்தோடு பொங்கி வருதற்பொருட்டு நின்ற வீணைபோல, இவரது பண்புமிக்க உள்ளந்தானும், கவித்வசக்தியின்வேகத்தாற் பண் கனிந்தூறும் இனிய கருத்துக்கள் அடுத்தடுத் தெழுந்து ஒன்றோடொன் றிசைந்து நவநவமான கானவிலாசத்துடன் ஒழுகிவரும் பக்குவமெய்திற்று. மதுரமிக்க இவ் இருதயகானத்தை யுணர்த்துதற்கென்றே அமைந்ததென்னலாம் இவரது அரிய சொற்செல்வம். தமிழணங்கு இவ் அருந்திறற் பெரியாரது குறிப்புணர்ந்த மாத்திரையில், அவர் விரும்பியவண்ணம் இன்சுவை கனிந்த நன்மொழியினைத் தட்டின்றி யுதவிவரக் காத்துநின்றனள். தமிழ்மொழியின் இனிமையினையும், அழகினையும், ஆற்றலையும், இவர் போல முற்றவுணர்ந்தார் பிறர்யாரும் இல்லையென்றே கூறலாம். தமிழ் மொழி இவரது தனிபாசினுக்கு அன்புற்றடங்கிநின்று குற்றேவல் புரிகுவதாயிற்று.

இங்ஙனம் உத்தமப் பெருங்கவிஞர்க்குரிய உத்தமலக்ஷணங்களனைத்தும் ஒருங்குநிரம்பிவிளங்கினர் கம்பர்பெருமான்.

பாரததேவியின் அருந்தவம் முற்றுப்பெறுங்காலமாயிற்று. அவ் அம்மை பல நூற்றாண்டுகளாக ஆசையொடு எதிர்நோக்கியிருந்த ஸம்பூர்ண ராமபிரானை வாசாரூபமாக உலகினர்க்களிக்கக் கம்பர்பெரு

மான் திருவுளம்பற்றினர். எத்தகைப் மங்கல நன்னாளில் நமது கவிஞர் இங்ஙனம் எண்ணித்துணிந்ததென யாவரால் அளவிட்டுரைக்கத் தகும்! தம்முயிர்போற் கம்பர்பெருமானைப் பாதுகாத்துத் தமக்கும் தமிழ்க்கும் அழியாப் புகழ் தேடிக்கொண்ட சடையப்பவள்ளலார் தூண்ட இராம சரிதம் பாடுங் கருத்து எழுந்ததெனச் சிலர் கூறுவர். ஆனால் இத்தெய்வமாக்கதையைப் பாடவேண்டுமென்று கம்பரது உயிரே அளவு கடந்த ஆசைகொண்டிருந்தது என்பதுதான் உண்மை. 'ஆசைபற்றி யறையலுற்றேன்' என்றே நமது கவிஞர்சிகாமணியும் நமக்கு உணர்த்துகின்றார். பிறர் யாரேனும் வேண்ட இத் தெய்வநறுங்கனி ரஸம்விளைந்து பழுத்ததாகமாட்டாது. மேலும், இப் பெருங்கருத்து, கம்பரது இளமைப் பிராயத்திலேயே அவரது திருவுள்ளத்திற் றோன்றி யிருத்தல்வேண்டும். இளமைதொட்டே தம்மை இராமாயணத்திற்கெனத் தத்தஞ்செய்தனர். தமது வாழ்வின் தனிப்பெருநோக்கமே இராம காதையை யியற்றுதலென்று கடைப்பிடித்தனர். இவரது சிந்தை இராமசரிதத்தைச் சுற்றிச் சுழன்றது; இவரது சொற்கள்யாவும் இராம சரித்திரம்பற்றியே விளைந்தன; இவரது செயல்கள்யாவும் இராம சரிதத்தை முற்றுவிக்கும்பொருட்டே எழுந்தன.

" ஆரே னையுமொன்று சொல்லத் தொடங்கினு மவ்விடத்துன்
பேரே வருமென்ன பேறுபெற்றேன் பெரு நான்மறையின்
வேரே மிதிலையின் மின்னொடும்போய் வெய்ய கானடைந்த
காரே கடல்கொளுந்தச் சிலை வாங்கிய காகுத்தனே "

என்ற அழகியசெய்யுளின்பொருள் கம்பர்பெருமானது திருவுளத் தன்மையை நினைக்கும்பொழுதுதான் நமக்குப் புலப்படுகின்றது.

" உண்ணும் நீரினு முயிரினு மவனையே யுகப்பார் "

என்ற தெய்வத்திருவாக்கின் இன்னிசையிலே நமது மனம் கட்டுண்டுகிடப்பதன் காரணம் இப்பொழுதுதான் நாம் அறிகின்றோம். இவரது அகன்று பரந்த அகவுலகிலே இராமசரிதமொன்றே தனியாட்சி புரிந்துவந்தது. காலம் அளவு முதலிய வரையறையின்றிச் செவிநுகர் கனிகளைச் சொரிந்து தரவல்ல கம்பரென்னும் கற்பகதருவினை, வெயில் முதலியனவற்றால் வாடிவருந்தாதபடி, நீர்பெய்து பாதுகாத்துவந்த சடையப்பவள்ளல் தாமும் இராமசரிதத்திற்கு அடுத்தபடியாகவே நம்

கவிஞர்பெருமானது அன்பிற்குரியராயினர். பலவருஷங்களாக, இரவும் பகலும், இராமாயணவிஷயத்தையே கம்பர் சிந்தனைசெய்து வந்தாராதல்வேண்டும். கதைப்போக்கினை அழகுபெற ஒழுங்குபடுத்துத லினும், பலவேறு கட்டங்களில் நிகழும் சம்பாஷணைகளின் முக்கியாம்சங் களைத் தெரிந்தெடுத்து அழகுபடுத்துதலினும், கதாபாத்திரங்களின் குணவிசேஷங்களை அவ்வவர்க்குரிய சொல் செயல் முதலியவற்றால் விளங்க அமைப்பதிலும், இவர் வாழ்நாளின் மூற்பகுதி கழிந்திருத்தல் வேண்டும். இராமசரிதம் என்னும் புண்ணிய தீர்த்தத்திலே இவர் தோய்ந்து தோய்ந்து அதன்கண் தம்மை ஊறவைத்திருத்தல்வேண்டும். தம்மை இராமசரிதமயமாக மாற்றியிருத்தல்வேண்டும். பலரும் இவரைப் பித்தரெனவும் பேதையெனவும் கூறுமாறு தமது உளங் கோயில்கொண்ட தெய்வப்பெருஞ்சரிதத்திலே ஈடுபட்டுப் பக்தராய்விளங்கியிருத்தல் வேண்டும்.

> "பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
> பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ"

என்று நம் கவிஞர்பெருந்தகை கூறுவதன்குறிப்பு உணரத்தக்கது. இவர் தம் பெருங்காப்பியத்தைப் பாடுவது பிறரது ஆணையை மேற் கொண்டன்று; பிறர் கேட்டு உளங்குளிரும்பொருட்டு மன்று; தம் ஆத்மதாகத்தைத் தணிக்கும்பொருட்டுத் தாம் பெய்துகொண்ட கான வர்ஷமே யாகும் இவரது 'இராமாவதாரம்'. இப் பெருந்தகையாரது கவித்வசக்தியனைத்தும் இராமசரிதத்தை அலங்கரித்தற்பொருட்டாகவே அரும்பி மலர்ந்து ஒளிசிறந்து மணங்கமழ்ந்து விளங்கியனவாகும். இத் தெய்வகீதத்தைப் பாடுதற்பொருட்டாகவே அமைந்துநின்ற ஓர் அரும்பெறல்வீணையென்று நம் புலவர்பெருமானைக் கூறின் அது மிகவும் பொருத்தமுடையதேயாகும்.

இராமகாதையைப் பாடுதற்கெனத் தம்மைப் பக்குவப்படுத்தி அவ் அருஞ் செயலினை மேற்கொள்ளுதற்கண்ணே தாம் ஈடுபட்டிருந்தபோதி லும், கம்பர்பெருமானது உள்ளத்தில் இடையிடையே சிறிது தளர்வு தோன்றாமற்போகவில்லையென்றுகருதற் கிடமுண்டு. வால்மீகிமஹரிஷி யின்பெருமையை நன்குணர்ந்தார் யார்தாம் அவரோடு கவிதையில் இகலி வெற்றிகொள்ள மனமொருப்படுவர்? பாடுதற்கமைந்த தெய்வசரிதத்தின்

பெருமையை நன்குணர்ந்தார் யார்தாம் அச் சரிதத்திற்குத் தமது கவித்வசக்தி போதியதாகுமென இறுமாந்திருப்பர்? இவ்வகைத் தளர்வு தோன்றியிருத்தல்வேண்டுமென்பதற்கு,—

'நொய்தி னெய்யசொல் நூற்கலுற் றேனெனை
வைத வைவின் மராமரம் எழ்துளை
எய்த எய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே.'

என்னுஞ் செய்புள் சான்றாகும். இங்ஙனம் மனந்தளர்ந்த காலங்களிற் சடையப்பவள்ளலாரே நமது கவிஞர்க்கு ஊன்றுகோலா யுதவினர். தம் உயிர்நண்பாது கவித்வசக்தியின்பெருமையைப் பலவாறாக அறிந்த சடையப்பர் அவரை அடிக்கடி யூக்கி மனத்தளர்வகற்றி இராமசரிதம் பாடுஞ் செயலினை மேற்கொள்ளச்செய்திருத்தல்வேண்டும் இதனை யடிப்படையாகக் கொண்டே சடையப்பவள்ளல் தூண்ட இராமகாதை பாடப்பெற்றதென்னும் பரம்பரைவரலாறு எழுந்ததாகல்வேண்டும்.

தமது கவித்வசக்தியின் பெருமையினாலும் சடையப்பாது அன்பினாலும் நமது மகாகவியின் உள்ளத்தில் ஏகதேசமாய்த் தோன்றிய தளர்வு அறவே நீங்கியது. தோன்றாத்துணையாய்நின்று உலகனைத்தையும் இயங்கச்செய்யும் திருவருளால் கம்பர்பெருமானது சிந்தை செயலாகப் பரிணமித்தது. இராமாயண-கானம் இனிதெழுந்து சப்திக்கத்தொடங்கிற்று. பாரதமாதாவின் தவம் முற்றி அவளது உயிராசை நிரம்புவதாயிற்று. அவள்மனத்திற் குகந்த புருஷோத்தமன் என்றும் அழியாத வாசாரூபத்தில் தோன்றுவானாயினன். இராமாவதாரப் பேரிதிஹாஸம் உருப்பெறலாயிற்று. பல நூற்றாண்டுகட்கு முன்னர் நிகழ்ந்த இவ் அரிய சம்பவம் இப்பொழுதும் நம்மால் அன்போடும் மகிழ்ச்சியோடும் நினைந்து இன்புறத்தக்கதாயுள்ளது. கம்பர்பெருமானோடு உடனுண்டுறைந்து அவரைத் தம்முயிரினு மேலாகப் பாதுகாத்து வந்த சடையப்பவள்ளலார் எத்துணை யன்போடு இப் பெருநிகழ்ச்சியைப் போற்றியிருத்தல்வேண்டுமென அறிதல் கூடுமோ? அவரது அன்பின் திறம் யாவரால் உணரத்தக்கது! 'அன்பென்ப தொன்றின் றன்மை யமரரு மறிந்ததன்றால்' என்று கம்பர் தாமே அருளிச்செய்தது தமது ஆருயிர்நண்பராகிய வள்ளலது பேரன்பினை மனத்தகத்துக்கொண்டே

போலும்! சடையப்பவள்ளல் தம் ஊர்ப்புறத்துள்ள ஓர் அழகிய பூஞ் சோலையிலே அவரது அன்பே வடிவெடுத்தாற்போன்ற பெருமை வாய்ந்த மணிமண்டபமொன்று வனப்புத் தோன்ற அமைத்தனரென்று நாம் கருதல்வேண்டும். அப்பூஞ்சோலையிலே பிரகிருதிதேவி நிச்சப்த மாய் அமைதியுற்று விளங்குகின்றாள். மணிமண்டபத்தினுள்ளே கம்பர்பெருமான் அறிவும் அன்பும் கவித்வசக்தியும் தமது திருமுக மண்டலத்தே ஒளிசிறந்துதோன்ற நடுவிருந்தருளுகின்றார். சிறிது தூரத்தே விரைந்தேற்குஞ் செவியும் சோர்வறியாத ஞாபகமுமுடைய தமிழறிஞர் பலர் ஏடும் எழுத்தாணியுங்கொண்டு இவரைச் சூழ்ந்திருக் கின்றனர். வாயிற்படியினருகே சடையப்பவள்ளலார் ஓர் ஆசனத்தின் மீது அமர்ந்தருளியிருந்து எவ்வகை யிடையூறும் எய்தாவண்ணம் கவலையொடு நோக்கி அன்புபூண்டு விளங்குகின்றார். பூஞ்சோலையிலே அந்நியரது வரவு தவிர்க்கும்பொருட்டுக் காவலாளர்கள் நிற்கின்றனர். தமிழார்வம் தாங்கலாற்றாத தமிழ்ச்செல்வர் சிலர் தமது ஆசை யிழுத்துச் செல்லுதலால் அறிமுகமுள்ள காவலாளரைக் கடந்துசென்று மணிமண்டபத்தருகில் வந்து இராமசரிதமாகிய கீதவமுதைச் செவி மடுத்தற்கு ஒற்றியிருந்தனர். ‘உலகம் யாவையும் தாமுளவாக்கலும்’ என்னும் பொருள் நிரம்பிய மதுரத் திருவாக்கு நம் கவிஞர்சிகாமணி யின் இதயத்தினின்றும் பொங்கியெழுந்தது. மணிமண்டபமுழுதும் நிறைந்து பூஞ்சோலையிற் பரந்துலவி மக்களிதயத்தே குடிகொண்டு நின்றது இத் தெய்வத்திருவாக்கு. எட்டெழுதும் ஒலி கேட்கலாயிற்று. கம்பர்பெருமானது திருவுள்ளம் இராமாயண-கீதமாகக் கரைந்துபெருகி ஏட்டிற் பிரவஹித்துப் பாய்குவதாயிற்று.

இங்ஙனம் தொடங்கிய இராமாவதாரம் முற்றுப்பெறுதற்குச் சில வருஷங்களேனும் சென்றிருத்தல்வேண்டும். சிறந்த ஆங்கிலகவிஞரும் நுண்ணிய ஆராய்ச்சியாளருமாகிய கோலரிட்ஜ் என்பவர், பத்துவருஷ காலம் இதிஹாஸப்பொருளினைக் குறித்துக் கவிஞர் சிந்தனைசெய்வ தற்கும் பத்துவருஷகாலம் அதனை எழுதிமுடித்தற்கும் ஆக 20-வருஷ காலமேனும் ஓர் இதிஹாஸம் பாடி முடித்தற்கு வேண்டப்படுமென்று ஒருவகைபாற் கணக்கிடுவித்தனர். ஆனால், இங்ஙனம் கணக்கிடும் போது கம்பரது இராமாவதாரம்போன்ற பேரிதிஹாஸத்தினை அவர் கனவிலும் நினைத்திரார் என்பது திண்ணம். மில்டன் எழுதிய

'சுவர்க்கநீக்கம்' என்னும் ஆங்கில இதிஹாஸத்தினையும், ஹோமர், வர்ஜில் முதலானோரது இதிஹாஸங்களையும் மனத்திற்கொண்டே மேற்கூறிய காலவரையறை செய்திருத்தல் கூடும். சுவர்க்கநீக்கத்தினைக் காட்டினும் இராமாவதாரம் நான்குமடங்குபெரிது. அதனை யெழுதி முற்றுதற்கு 40-வருஷங்களேனும் முன்குறித்த கணக்கின்படி வேண்டு மெனக் கருதலாம். இங்கே ஒரு விஷயம் மனங்கொள்ளுதற் குரியது. மேல்நாட்டுக்கவிஞர்கள் கவிதையெழுதும்முறை வேறு; நமது நாட்டுக் கவிஞர்கள் கவிதையெழுதும்முறை வேறு. மேல்நாட்டுக்கவிஞர்கள், தமது மனத்தின்கண் கவிதை தோன்றியவுடன், அதனைத் தாமே யெழுதிக்கொள்ளுதல் பெருவழக்காகும். இதனால் கவிதைப் பிரவாஹ மானது இடையீடின்றிச் செல்லுதற்குச் சிறிது முட்டுப்பாடு உளதா கின்றது. கவித்வ ஆவேசம் நிலைநின்றுவிளங்குவதற்கும் சிறிது தடை ஏற்படுதல்கூடும். நமதுநாட்டுப் பெருங்கவிஞர் கவிதைகள் தோன்றத் தோன்றச் சொல்லிவருதலும் அவர்களது மாணாக்கர்களும் பிற தமிழறிஞர்களும் உடனிருந்து அவற்றை ஏட்டில் எழுதிக்கொள் ளுதலுமே பெருவழக்காக ஏற்பட்டுள்ளது. கவிதைகள் எத்துணை விரைந்து பெருகிவரினும் ஏடெழுதுவோர் அவற்றை வரன்முறையே ஒவ்வொன்றாகப் பங்கிட்டுத் தமது திண்ணிய ஞாபகசக்தியால் விரைந்து எழுதிவந்தனர். அன்றியும் விருத்தம் முதலிய தமிழ்க்கவிதை இசை யோடு கலந்தன்றித் தோன்றுதலில்லை. இவ் இன்னிசை இடையீடின்றிச் செய்யுட்கள் விரைந்துவருதற்குப் பெரிதும் அநுகூலஞ்செய்கின்றது. இங்குக்கூறிய இரண்டு காரணங்களாலும் கோல்ரிட்ஜ் கணக்கிட்டமுறை நம நாட்டிற்குப் பொருந்துமாறில்லை. இராமாவதாரம் பாடிமுடிதற்கு இத்தனைவருஷங்கள் ஆகியிருத்தல்வேண்டுமென நிச்சயமாய் வரை யறுத்துக்கூறுதல் ஏலாது. எனினும் ஒன்றுமாத்திரம் ஐயமின்றிக் கொள்ளுதல் தகும். அறிவு, அநுபவம், கல்வி, கவித்வம்: ஆகிய இவையனைத்தும் முதிர்ந்து விளங்கிய தமது வாழ்வின் உச்சகாலத்தை இராமாவதாரத்திற்கெனக் கம்பர் அர்ப்பணஞ்செய்தனரென்பதே உண் மையாகும். தினமொன்றுக்கு 700-செய்யுட்கள்வீதம் இரண்டுவாரத் திற்குள் இராமாயணம் பாடிமுடிந்ததெனவும், இத்தினங்களிலே இரவுகள் யாவும் வால்மீகி-ராமாயணம் பொருள்கேட்டலிலே கழிந்தன வெனவும் சிலர் கூறுவர். இதனை,—

"... ... ...
... ...அபிநவ கவிநாதன்
விழுந்த நாயிற தெழுவதன் முன்முறை வேதிய ருடனூாய்க்
தெழுந்த நாயிறு விழுவதன் முன்கவி பாடின தெழுநூறே"

என்ற செய்யுள் ஆதரிப்பதாமென்றுங் காட்டுவர். இவ்வாலாறு முழுதும் அசம்பாவிதமாயுள்ளது. உணவருந்துதல் முதலிய அவசிய கர்மங்களால் இடையீடுபடாது இராமாவதாரம் பாடப்பெற்றதெனக் கொள்ளினும், நிமிஷம் ஒன்றிற்குச் செய்யுளொன்றுவீதம் பாடப்பெற்றதாகல்வேண்டும்! அன்றியும் மேற்காட்டிய செய்யுள் ஏட்டுப்பிரதிகள் பலவற்றிற் காணப்படவில்லை. பிற்காலத்தே கதை பெருக்குவோர்களால் இது பாடப்பெற்றதாமெனக் கருதுதல் தகும். மேலும் நூலினகத்து ஆழ்ந்துகிடக்கும் சில சான்றுகளும் இவ்வரலாற்றினை அநாதரிக்கின்றன. கடைசியாக, இராமாயணம் போன்ற பெருங்காவியம் பிறக்கும் கவித்வ—தத்துவத்திற்கு இவ்வாலாறு முழுதும் மாறாகவுள்ளது. இக்காரணங்களால் மேற்காட்டியசெய்யுள் சிறிதும் கொள்ளத்தக்கதன்று; ஆனால் இச்செய்யுள் குறிக்கும் வரலாறு மிக அரியதோர் உண்மையினையறிவுறுத்துகின்றது. கவித்வ-ஆவேசம் நிரம்பி உணர்வுமயமாய்க் கம்பர்பெருமான் விளங்கிய அமயங்களில் இராமாவதாரம் பாடப்பெற்றதாகும். அவ் அமயங்களிற் கவிதைப்பிரவாஹம் சிறிதும் இடையீடின்றிப் பெருகிப் பாய்ந்து, கம்பீரமாயோடும் பெருநதிபோன்று, விரைந்து சென்றது. இதனையுணர்த்தும் அத்துணையே மேலைச்செய்யுள் உண்மையுடையதாகும்.

வருஷங்கள் சில சென்றன. இராமகாதை முற்றுப்பெற்றது. சம்பூர்ண-ராமபிரான் வாசாரூபமாகத் தமிழ்நாட்டில் திருவவதரித்துப் பாரதமாதாவின் திருவுளத்தை மகிழ்வித்தனன். கம்பர்பெருமான் தமிழுலகில் தோன்றியதன்பயன் இனிது முற்றியது. அவரது ஆன்மா இராமசரிதவடிவமாய் உருவெடுத்து விளங்கியது. தமது இராமகாதையினைத் தமிழ்மக்கட்குப் பொதுவுடைமையாகவும் குலதனமாகவும் அரங்கேற்றி ஈந்தருளுவதொன்றே அவராற் செயற்பாலதாய் எஞ்சிநின்றது.

புண்ணியதினமொன்று தெரிந்துகொள்ளப்பட்டது. கம்பரது இதிஹாசத்தில் நாயக நாயகிகளுக்கு விவாஹ மகோத்ஸவம் நிகழ்ந்த தாகக் கூறும் பங்குனியுத்தரத்தின்மறுதினமாகிய பங்குனியத்தநாளே மிக்க பொருத்தமுடைய தினமாகக்கொள்ளப்பட்டது. *ஸ்ரீரங்கநாதரது திருச்சந்நிதியே அரங்கேற்றுதற்குரிய இடமாயமைந்தது. சடையப்ப வள்ளலாரால் அழைக்கப்பெற்ற தமிழ்நாட்டுப்புலவர்சிகாமணிகளும் பிரபு சிகாமணிகளும் அரங்கேற்றுமண்டபத்தில் வரன்முறையே வீற்றிருந்த னர். பக்தர்குழாங்கள், பள்ளத்துப்பாயும் நன்னீர்போல, நாலுதிசை களினின்றும் வந்து சூழ்ந்தனர். பண்டிதர்களும் பாமரர்களும் இடம்பெறாது மிடைந்து நெருங்கினர். மண்டபத்தின் அகத்தும் புறத்தும் புடைசுற்றித் தமிழ்மக்கள் திரண்டு கூடினர். அதன் நடுவே சிறிது உயரிய பீடத்தின்மீது கம்பர்பெருமான் எழுந்தருளியிருந்தனர்.† அவரது திருமுகத்தே பேரறிவும் ஆழ்ந்த சாந்தியும் பெருங்கவித்வசக்தியும் நர்த்தனம்புரிகின்றன; அவரது நயனங்கள் ஆழ்ந்தகன்று உள்ளமனைத்தையும் ஒருங்குதோற்றி விளங்கு கின்றன; நோக்குவோரையெல்லாம் வசீகரித்தமைகின்றன; அன்பு அலையெறிந்து படர்கின்றது. அறிவு கூர்த்துவிளங்குவதனையொப்ப அவரது நாசியும் நீண்டு கூர்ந்திருக்கின்றது. அவரது உதடுகள் இளநகையரும்பி விகசிக்கின்றன. அகன்ற மார்பும் திரண்ட புயமும் பேரழகு பயக்கின்றன. அவரது தடக்கைகள் தாள்தொட்டு நீண்டிருக் கின்றன. அவரது திருமேனி முழுவதும் தெய்வவொளி பரந்து சுடர்கின்றது. இப்புலவர்பெருமானையடுத்து யாரினுமினிய பேரன்பின ராகிய சடையப்பவள்ளல் வீற்றிருக்கின்றனர்; கருணையின் நிலயம் கவிஞரின் புகலிடம் தமிழ்நாட்டுப்புலவர்கள் பலகாலமாக ஈட்டிவந்த புண்ணியம் அனைத்தும் ஒருங்கு திரண்டு வடிவெடுத்துவந்தாற்போன்று அமர்ந்திருக்கின்றனர்; அகக்கண்கொண்டு நுனித்துநோக்குமோமாயின்

*திருவரங்கத்திலே கம்பர் தமதுகாவியத்தை யரங்கேற்றியதாகக் கூறுவர். அரங்கநாதன்சந்நிதி வெண்ணைநல்லூரி லுள்ளதுபோல 'எண்ணிய சகாத்தம்' என்னுஞ் செய்யுள் கூறுகின்றது.

†திருவரங்கத்திலுள்ள கற்சிலையொன்று கம்பர்பெருமானது திருவுருவ மாகச் சிலரால் கருதப்படுகின்றது. இங்ஙனம் கருதுதற்கு ஆதாரம் யாதுமில்லை. இக்கற்சிலை கம்பரன்றென்பதே உறுதி.

வேறுசில அற்புதக்காட்சிகளும் காணலாகும். தெய்வகணங்கள் களிசிறந்து குலவுகின்றன. பாரததேவி எல்லையற்ற சாந்தியுடனும் எல்லையற்ற ஆனந்தத்துடனும் விளங்குகின்றாள். அவளது திருமுக மண்டலத்தைச்சுற்றியிலதும் சோபாவலயத்தினூடே உளத்துநின்றும் பொங்கிவரும் களிப்பின் சிற்றருவி மெல்லெனவீழ்ந்து ஒழுகுகின்றது. இத் தேவியை யடுத்துத் தமிழன்னை அழகு சிறந்து ஒளிருகின்றாள். அவளது திருமுடிமீது நூதனமாயமைக்கப்பெற்றதும் விலையற்ற இரத்தினங்களால் இழைக்கப்பெற்றதுமான கிரீடமொன்று குளிர்ந்த ஒளிபரப்பி நிலவுகின்றது; அவளது செந்தாமரைக் கண்கள் கருணை நிலவெறித்துமிளிர்கின்றன; திருமேனி முழுதும் அன்பின் செழுமை யாற் பொடித்துத் துடிக்கின்றது. ரிஷிகணங்கள் ஒருபாற் குழுமி யிருந்தனர். அவருள்ளே வால்மீகியும் வள்ளுவரும் தலைமைதோன்ற விளங்குகின்றனர். வால்மீகிமஹரிஷியின்சிரத்தின்மீது சடைமா மகுடம் இலங்குகின்றது. இராமகதாம்ருதத்தை உலகிற்கருளிய அவரது தெய்வத் திருவதரத்தின்கீழ் முதுமையாற் பஞ்செ ன வெளுத்துத் தோன்றும் தாடி நீண்டு அடர்ந்து பொலிகின்றது. அவரது ஆழ்ந்து தெளிந்த கண்களிலே கவித்வவொளி இன்னும் பிரகாசிக் கின்றது. மழித்த சிரமுடையவராய்ச் சாந்த மூர்த்தியாய் அமர்ந்திருக் கின்றனர் வள்ளுவப் பெருந்தகையார். பேரறிவும் பேரருளும் அவரது கண்களிற் கனிந்து இலங்குகின்றன. தமிழ்த்தாய் வயிற்றில் தம்மோடு உடன்பிறந்த கவிஞர்பெருந்தகைமீது அவரது அளவுகடந்த காதல் படர்ந்து செல்கின்றது. அவரது துரிசிலாத் திருமனத்தே இன்று சிறிது கர்வம் இடம்பெற்றிருப்பதுபோலத் தோன்றுகிறது.

அரங்கநாதன்சந்நிதியில் இத்துணை விசேஷமான திருக்கூட்டம் என்றும் இருந்ததே இல்லையெனலாம். யாண்டும் கண்கள்! யாண்டும் செவிகள்! அனைவரும் ஏகாக்கிரசித்தராய்க் கம்பர்பெருமானை நோக்கிய வண்ணமாயிருக்கின்றனர். "ஐந்துபேரறிவும் கண்களேகொள்ள அளப் பருங் கரணங்கள் நான்கும்—சிந்தையேயாக" என்ற அருமைத் திரு வாக்கு எத்துணையுண்மையுடையதென இன்று ஒருவாறு அறியலாகும். குறித்த அமயம் நெருங்கிற்று. உலகமனைத்தையும் ஆக்கி யளித்துத் துடைத்தலையே தனது விளையாட்டாகவுடைய பரம்பொருளை நெஞ்சுற வழுத்திக் கம்பர் தமது இதிஹாஸகீதத்தைப் பாடி அரங்கேற்றலாயினர்.

உளத்தை யுருக்கி யுருவஞ்செய்ததுபோலத் தோன்றிய கம்பர்பெருமானது கம்பீரத்தொனி மண்டபமுழுவதும் பரந்துசென்றது; கேட்டோர் இதயத்தினின்றும் எதிரொலி யெழுந்தது. இராமாயணமாகிய அமுத கீதத்தில் ஆண்டிருந்தோர் மனங்கள் லயித்து மயங்கின.

'வயிரியர் மதுர கீதம் மங்கைய ரமுத கீதம்
செயிரறு மகர யாழின் தேம்பிழி தெய்வ கீதம்
பயிர்கிளி வேயின் கீதம் என்றிவை பருகி விண்ணோர்
உயிருடை யுடம்பு மெல்லாம ஓவிய மொப்ப நின்றார்.'

என்று கூறியதனோடொப்ப அனைவரும் சித்திரப்பதுமைகள்போன்று செய்கையற்றிருந்தனர். இராமசரிதம் படிப்படியாய் வளர்ந்தது. செஞ்சொற் கவியின்பம் இனைத்தென்பது இன்றுதான் உணரலாயிற்று. சில பொழுது அவையகத்தார் வியப்பு மேலிட்டு மதிமருண்டு கிடப்பர்; சில பொழுது உவகை மேலிட்டு ஆநந்தவாரியில் திளைத்திருப்பர். சில சமயம் சோகத்தால் உளங்கலங்கி நைந்து வருந்துவர்; சிலசமயம் பக்தியால் உளங்கனிந்து விளங்குவர். ஒருகால் நகைச்சுவைமீதூர்ந்து மெய்குலுங்கச் சிரிப்பர்; ஒருகால் பயங்கொண்டு வெருண்டு நடுநடுங்குவர். ஒருசமயம் வீரம் மேலிட்டுப் புயம்பூரித்து எற்றெழுவர். 'அழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்றவல்லார்?'

பூலோகத்திலும் வானுலகத்திலும் நாட்டிலும் காட்டிலும் நதிக்கரையிலும் கடற்கரையிலும் யுத்தகளத்திலும் ஆகாயமார்க்கத்திலும் நிகழ்ந்த சம்பவங்களெல்லாம் திருவரங்கர்சந்நிதியிலே நடித்துக்காட்டப்பெற்றன. அயோத்திநீங்கிய அரசர்பெருந்தகை புஷ்பகவிமானமேறி ஸீதாலக்ஷ்மண சமேதராய் வானரபரிவாரங்களுடன் திரும்பத் தனது நகரமடைந்து,

'தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனுந் தகையானைப் பரதனெனும் பெயரானை'

வாழ்வித்தருளினன். கைகேசியின் சூழ்வினையால் தடையெய்தி ஸீதாபஹரணமென்னும் சோகசம்பவத்தால் இடையீடுபட்ட பட்டாபிஷேக முஹூர்த்ஸவம் விமரிசையாய் நிகழ்கின்றது.

'அரியணை யனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன் வெண்குடை கவிக்க இருவரும் கவரி பற்ற
விரிகடலுலக மேத்தும் வெண்ணெய்மன் சடையன் வண்மை
மரபுளோன் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.'

என்ற சிறப்புமிக்க செய்யுளைக் கம்பர்பெருமான் பாடினர். பாடின அளவில் அவைக்கணிருந்தோர் அனைவரும் சடையப்பவள்ளலாரை நோக்கி அவரது பெருமையையே உள்ளத் தெண்ணினார்கள். வள்ளலாரோ, தலைவணங்கியிருந்தனர்.

இராமாவதாரம் அரங்கேறி முடிந்தது. கவிதை வெள்ளத்தின் பெருஞ்சுழியில் அகப்பட்டுத் தம்மையிழந்துநிற்பாரையன்றிப் பிறரைக் காணுதல் அரிதாயிற்று. திடீரென ஓர் அரவம் உண்டாயிற்று. வால்மீகி மஹரிஷி புனைந்த சடைமுடி துளக்கிப் புலவரேற்றினை முகம்பார்த்து நடப்பாராயினர். அவரைத் தொடர்ந்து வள்ளுவப் பெருந்தகை, தமிழ் வேதம் எழுதியருளிய அருமைத் திருக்கரத்திற் பொன்கொண்டிழைத்து மணியைக்கொடு புனைந்த மகுடமொன்று தாங்கிப் பின்சென்றனர். இருவரும் தம்மையடுத்துவந்ததும் கம்பர்பெருமான் எழுந்து வணங்கலுற்றனர். அப்பொழுது தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியுடைய வால்மீகிமஹரிஷி தங்கையினுங் களிகூரத் தழுவிநின்று, 'நீரே கவிச்சக்ரவர்த்தி; எனது அன்பிற்குரிய ஞான புத்திரரை யின்றுதான் காணப்பெற்றேன்' என்றுகூறி, வள்ளுவப் பெருந்தகையார் தாங்கிச் சென்ற மகுடத்தை வாங்கிக் கம்பர்பெருமானது முடிமீது புனைந்தருளினர்.

இன்று பங்குனி அத்த நன்னாள். இந்தச் சுபதினத்தன்று இற்றைக்குச் சுமார் ஆயிரம்வருஷங்கட்குமுன்னர் மேல்விவரித்தவாறு கம்பர் பெருமானது இராமாவதாரம் தமிழ்மக்கள்தம் குலதனமாக அருளிச்செய்யப்பட்டது. இந்நாள்தான் தமிழ்த்தெய்வம் மணிமாமகுடம் புனைந்துகொண்ட பெருநாள். பாரததேவி பன்னெடுங்காலமாகமுயன்றுவந்த தவம் பயனிரம்பிமுற்றியது மிந்நாளே. இவ்விசேஷதினத்தைத் தமிழ்மக்களாகிய நாமனைவரும் இன்றுபோல் என்றும்போற்றிப் பாராட்டுவோமாக!

எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழின்மேற் சடையன்வாழ்வு
நண்ணிய வெண்ணெ நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை பங்குனி யத்த நாளிற்
கண்ணிய வரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே.

முற்றும்.

S. வையாபுரிப்பிள்ளை,
திருநெல்வேலிப்பாலம்.

ஸ்ரீ:

மதிப்புரை.

அக்ஷயவருஷ வாக்கிய பஞ்சாங்கம்:—இது, யாழ்ப்பாணத்தைச் சார்ந்த நல்லூர் இரகுநாதையரவர்கள் தத்தபுத்திரர் ஸ்ரீமத் சிவராமலிங்கையரவர்களாலும், பௌத்திரர் ஸ்ரீமத். பஞ்சாக்ஷர ஐயரவர்களாலும் கணிக்கப்பெற்று 80 பக்கங்களுக்குமேலும் உள்ள புத்தகரூபமாகப் பதிக்கப்பெற்றிருக்கிறது. இதில், சாதாரணமாகப் பல பஞ்சாங்கங்களிலும் காணப்படும் விஷயங்களைக் காட்டிலும் கணனம் ஒரை சங்கிதை என்னுமிவற்றாலறிந்துகொள்ளவேண்டிய சிறந்த விடயங்கள்பல சேர்க்கப்பட்டுள்ளன. ஆதலால் இது தினசுத்தியும் வ்ருதாதிகளுமறிவதற்கன்றி ஜாதகம், மூகூர்த்தம் முதலியவற்றை நிர்ணயிப்பதற்கும் மிகுதியும் உபயோகமுள்ளது. இதன்விலை சதம் 25. தபாற்செலவு வேறு. வேண்டுவோர் யாழ்ப்பாணம் இரகுநாதையர் சோதிடபரிபாலனமடத்தில் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

'இயற்கைத்தோற்றங்கள்' (முதற்பாகம்):—இது, ராஜமஹேந்திரபுரம் காலேஜ் அஸிஸ்டெண்டு புரொபஸர் ஸ்ரீமத். K. C. வீரராகவையர் M, A., L.T., அவர்களால் மூதற்பாரத்திற்படிக்கும் சிறுவர்க்குக் கற்பித்தற்கேற்றவாறு இயற்கைத்தோற்றங்களைப்பற்றிய 19 விஷயங்களை 80 பக்கத்துள் சோதனைமுறைகளும், அவற்றை விளக்குதற்குரிய படங்களும் அமைத்து நன்றாயெழுதப்பட்டிருக்கிறது. ஆங்கிலப்பயிற்சியில்லாத உபாத்தியாயர்களும் இப்புத்தகத்தைப்படித்து விஷயங்களைத் தெரிந்துகொண்டு மாணவர்களுக்கு நன்றாய்க் கற்பிக்கக்கூடியநிலையில் சாதாரண வசனநடையி லமைந்திருப்பது மிகவும் பயன்படத்தக்கது. ஆங்கிலகலைகளைத் தேசபாஷையால் உணர்த்தலியலுமென்பதற்கு இது காட்டாகத்தக்கது. இதன்விலை அணா 4. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப்பெறலாம்.

———